# கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)



பாலகுமாரன்

GOODWILL'S

..........................ஆனால் ஓலை எடுத்து வந்தவர்கள் கெட்டிக்காரர்கள்.அவர்கள் வெறும் தூதுவர்கள் மட்டுமல்ல, உளவாளிகள்.

அந்த சபையில் என்ன பேச்சு நடந்தது யார் யார் என்ன என்ன பேசினார்கள் என்று மெல்ல மெல்ல வாயை நோண்டி தெரிந்து கொண்டார்கள். தள்ளி நின்று வேடிக்கை பார்த்த பொது மக்களிடம் அதை கேட்டு தெளிவு படுத்திக் கொண்டார்கள்.

அரசாங்கம் என்பது மிக உயரமானது. அகலமானது. இரும்புக் கரம் கொண்டது .அதற்கு செவிகளும்கண்களும் பல்லாயிரக்கணக்காக உள்ளன.ஒரு அரசாங்கம் பொது மக்களை எப்பொழுதுமே கவனமாக பார்த்து கொண்டிருக்கும்.

ஒரு அரசாங்கத்தை எதிர்ப்பது என்பது எளிதான காரியமே அல்ல. சோழ தேசத்து அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்ததால் அங்கு பேசிய அந்தணர்களுடைய இலச்சங்கங்கள் தெளிவாக இராஜேந்திர சோழருக்கு சொல்லப்படுவதற்காக திருமுல்லைக்கு அந்த குழு உட்கார்ந்து கொண்டது.

தொண்டை மண்டலத்தில் தான் அரிசி வாங்க வேண்டும் என்பது தெளிவாகிவிட்டது. அரிசி வாங்குவதில் ஏதேனும் சிக்கல் உண்டாஎன்று தெரிந்து கொள்வதற்க்காக கிருஷ்ணன் ராமன் ஒரு ஆளையும் பரம் மழபாடி ஒரு ஆளையும் அனுப்பி வைத்திருந்தார்கள்.

இராஜேந்திர சோழர் தன்னுடைய ஆளை எந்த விசாரணையும் செய்யாமல் இவர்கள்விசாரிப்பதை இவர்களிடமே கேட்டு வைத்துக் கொள்ளும்படி இன்னோரு ஆளை அனுப்பி வைத்திருந்தார்.

ஒருவருக்கு தெரியாமல் ஒருவர் இரகசிய உளவாளிகளாக அந்த குழுவில்இருந்தார்கள்.திருமுல்லையில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அவன் வாயிலுக்கு போனான்.தன்னுடைய ஆட்களை பலப்பக்கமும் ஏவினான்

என்னவயலென்று பார்க்காதீர்கள். நெல் முற்றி இருந்தால் அறுத்து களத்துக்கு கொண்டு வாருங்கள்,போரடித்து நெல்லை காய வையுங்கள்............................................